# ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக மிக நீண்ட காலம் நாட்டிற்குப் பணியாற்றிய மாண்புமிகு பிரதமரின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு.

இந்திய நாட்டின் ஜனநாயகப் பயணத்தில், இன்று, ஜூன் 10, 2026, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் உத்வேகமளிக்கும் மைல்கல் சாதனையைக் குறிக்கிறது. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமராக நீண்ட நாட்கள் தொடர்ந்து பணியாற்றும் பிரதமர் என்ற சாதனையை இன்று திரு நரேந்திர மோடி அவர்கள் படைத்துள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக, 4,399 நாட்கள் தொடர்ந்து சேவையாற்றி அவர் வரலாறு படைத்துள்ளார். சுதந்திர இந்தியாவில் முதல்முறையாக இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது. முன்னதாக, திரு ஜவகர்லால் நேரு, 1952 முதல் 1964 வரை தொடர்ச்சியாக 4,398 நாட்கள் இந்த பதவியை வகித்து வந்தார்.

இந்தியாவின் ஜனநாயக விழிப்புணர்வு, மக்களின் நம்பிக்கை மற்றும் அவர்களது பங்கேற்பின் வலிமையை இந்தத் தருணம் எடுத்துரைக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி, ‘தேசத்திற்கு முன்னுரிமை’ என்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து, உண்மை, நியாயம், கடின உழைப்பு மற்றும் நேர்மையைத் தனது வாழ்க்கையின் வழிகாட்டும் கொள்கைகளாகக் கொண்டு, மக்களுக்கு சேவை செய்வதில் தளராத அர்ப்பணிப்புடன் செயல்படும்போது, இதுவரை இல்லாத ஆதரவை வழங்கி மக்கள் அவருக்கு ஆசி வழங்குகிறார்கள். இன்றைய வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் மக்களின் அத்தகைய ஆசியின் பிரதிபலிப்பே ஆகும்.

இந்தச் சிறப்பான தருணத்தை முன்னிட்டு மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கு மத்திய அமைச்சரவை தனது மனமார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஜூன் 10, 2026-ன் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை, இதர குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுடனும் ஒருங்கே அமைந்துள்ளது. மாண்புமிகு பிரதமரின் தலைமையின்கீழ் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, 12 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. அரசின் தலைமைப் பொறுப்பில் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றிய வரலாற்று மைல்கல் சாதனையையும் மரியாதைக்குரிய பிரதமர் எட்டவிருக்கிறார்.

ஆறு தசாப்தங்களுக்கு பின், பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியமைக்க நாட்டு மக்கள் வாய்ப்பளித்தது, மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். உணர்திறன், நிதானம், நோக்கம் மற்றும் உறுதியான முடிவெடுக்கும் திறன் கொண்ட திறமையான நபர் தலைமைப் பொறுப்பில் இருப்பது குறித்து நாம் பெருமிதம் கொள்கிறோம்.

மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் வாழ்க்கை, சேவை, துணிச்சல் மற்றும் தேச கட்டமைப்பிற்கான தொடர் முயற்சிகளின் அடையாளமாகத் திகழ்கிறது. ஒரு அமைப்பு சார்ந்த தொண்டராகவும், அதன் பின் ஒரு மாநில முதலமைச்சராகவும் அவர் பெற்றிருந்த பரந்த அனுபவத்தின் மூலம் கள யதார்த்தங்களை அவர் நன்கு புரிந்து கொண்டிருப்பது, அவரது கொள்கைகளை உணர்வுபூர்வமானதாகவும், நடைமுறைக்கு ஏற்றதாகவும் சிறந்த பலன்களை தரக்கூடியதாகவும் மாற்றியுள்ளது.

2014-ல் பிரதமராக பதவியேற்ற பின், நாடாளுமன்றத்தின் மைய அரங்கில் அவர் தன்னை ‘பிரதான சேவகர்’ என்று பிரகடனப்படுத்தினார். நாட்டின் அரசியலமைப்பை புனித நூல் என்று வர்ணித்த அவர், தனது அரசு, ஏழைகளின் நலனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம் என்ற தாரக மந்திரத்தை அரசின் லட்சிய நோக்கமாக அவர் முன்னிறுத்தினார். கடந்த 12 ஆண்டுகால பயணம், இந்த உறுதிமொழிகளின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

பிரதமரின் தலைமையின் கீழ், ஏழைகளின் நலனை இந்தியா ஆளுகையின் மையமாக நிலைநிறுத்தியுள்ளது. உறுதியான வீடுகள், மின்சார வசதி, சமையல் எரிவாயு இணைப்புகள், தூய்மையான குடிநீர், கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகள் முதல்முறையாக நாட்டின் கோடிக்கணக்கான மக்களைப் பெருமளவில் சென்றடைந்துள்ளன. அதேபோல கோடிக்கணக்கான மக்களுக்கு முதல்முறையாக வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டு, இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமல், அரசின் நிதியுதவி பயனாளிகளை நேரடியாகச் சென்றடைகின்றன. 80 கோடிக்கும் அதிகமான மக்கள் முதல்முறையாக விலையில்லா ரேஷன் பொருட்களைப் பெற்று பயனடைகின்றனர். 60 கோடிக்கும் அதிகமான ஏழை மக்கள், 5 லட்சம் ரூபாய் வரையில் இலவச மருத்துவ சிகிச்சைக்கான உத்தரவாதத்தைப் பெற்றனர். இத்தகைய நடவடிக்கைகள், மக்களின் தன்னம்பிக்கையை ஊக்குவித்ததுடன், தங்களால் மரியாதையுடன் வாழ முடியும் என்ற நம்பிக்கையையும் அவர்களிடையே ஏற்படுத்தின. இதன் விளைவாக சுமார் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டனர்.

**நாட்டின் இளைஞர் சக்தியை, பிரதமர், இந்தியாவின் மிகப்பெரிய சொத்தாகக் கருதுகிறார்**. அவரது வழிகாட்டுதல்களின்படி, திறன் மேம்பாடு, ஸ்டார்ட் அப் இந்தியா, புத்தாக்கம், டிஜிட்டல் பொருளாதாரம், விளையாட்டு, தொழில்முனைவு மற்றும் உடற்திறன் முதலியவை இதுவரை இல்லாத வகையில் பெரும் ஊக்கம் பெற்றுள்ளன. கடந்த 12 ஆண்டுகளில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய புத்தொழில் நிறுவன சூழலமைப்பு கொண்ட நாடாக உருவெடுத்துள்ளதுடன், உலகின் மிகப்பெரிய விளையாட்டு சக்தியாகவும் வளர்ந்து வருகிறது. சந்திரயான் திட்டத்தின்கீழ் நிலவின் தென்துருவத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றி வைத்து, வளர்ந்து வரும் அதன் அறிவியல் திறனையும் இந்தியா உலகிற்குப் பறைசாற்றியுள்ளது.

பிரதமரால் எழுச்சி பெற்று, கடந்த 12 ஆண்டுகளில், பெண்களால் வழிநடத்தப்படும் புதிய அத்தியாயம் ஒன்றும் இந்தியாவின்

வளர்ச்சிப் பயணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அவரது வழிகாட்டுதல்களின்படி, அரசு தனது கொள்கைகளில் நாட்டின் பெண்களுக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. கழிவறை வசதிகள், புகையில்லா சமையலறைகள், கர்ப்பகால நிதியுதவி, முத்ரா திட்டம், பெண்களின் பெயரில் வீடுகள், லட்சாதிபதி சகோதரிகள் திட்டம் போன்று, பிறப்பு முதல் வாழ்வின் இறுதிக்கட்டம் வரை வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பெண்களுக்குத் தேவையான முழுமையான ஆதரவு அமைப்புமுறை உருவாக்கப்பட்டுள்ளது. மக்களவையிலும், சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்குவதன் மூலம் நாட்டின் கொள்கை வடிவமைப்பில் அவர்களது பங்களிப்பை அதிகரிக்கும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பிரதமரின் தொலைநோக்குப் பார்வையான ‘வளர்ச்சியடைந்த இந்தியா’வின் முக்கியத் தூண்களில் ஒன்றாக நமது விவசாயிகள் திகழ்கிறார்கள். அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளுக்கு புதிய விதைகளை வழங்குவது, முழுமை அடையாமல் இருக்கும் ஏராளமான நீர்ப்பாசனத் திட்டங்களைப் பூர்த்தி செய்வது, பிரதமரின் விவசாயி கவுரவிப்பு நிதியுதவியை வழங்குவது, குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிப்பது, அரசு கொள்முதலை பெருக்குவது போன்ற ஏராளமான நடவடிக்கைகள் கடந்த 12 ஆண்டுகளில் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சிறு விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் மீனவர்களின் நலனுக்காக இதுவரை இல்லாத அளவிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண் கடன் அட்டைகளை கால்நடை வளர்ப்போர் மற்றும் மீனவர்களுக்கும் நீட்டிக்கும் மாண்புமிகு பிரதமரின் முடிவால், லட்சக்கணக்கானோர் பயனடைகிறார்கள். இன்று இந்தியாவின் வேளாண் ஏற்றுமதிகள் 5 லட்சம் கோடி ரூபாயைக் கடந்துள்ளது. விவசாயிகளின் நலன் சார்ந்த மாண்புமிகு பிரதமரின் கொள்கைகளின் தாக்கத்தை இது உணர்த்துகிறது.

பிரதமர் அவர்கள், 'தேசமே முதலில்’ என்ற உன்னத நோக்கத்தோடு முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு ஒருபோதும் தயங்கியதில்லை. இதனால்தான், பல தசாப்தங்களாக நிலுவையில் இருந்த முடிவுகளும் சீர்திருத்தங்களும் தற்போது சாத்தியமாகியுள்ளன. ஜம்மு-கஷ்மீரில் 370-வது சட்டப்பிரிவை ரத்து செய்தது, ஜிஎஸ்டி

அமலாக்கம், ஒரு பதவிக்கு ஒரே ஓய்வூதியம் திட்டம், முப்படைகளின் தலைமைத் தளபதி பதவியை உருவாக்கியது, பொருளாதார ரீதியாக பின்தங்கிய ஏழைகளுக்கு 10% இடஒதுக்கீடு வழங்கியது, எதிரி சொத்து சட்டத்தை நடைமுறைப்படுத்தியது, குடியுரிமை திருத்தச் சட்டத்தை இயற்றியது, முத்தலாக் நடைமுறைக்கு எதிராக சட்டம் கொண்டு வந்தது, வக்ஃப் சட்டத்தில் திருத்தம் செய்தது, அணுசக்தித் துறை சீர்திருத்தங்களுக்கான சட்டங்களை இயற்றியது, இந்திய நியாய சட்டத்தை அமல்படுத்தியது மற்றும் பல்வேறு தொழிலாளர் சட்டங்களை நான்கு சட்டத் தொகுப்புகளாக ஒருங்கிணைத்தது போன்ற மிக முக்கியமான முடிவுகள், தீர்க்கமான தலைவர் என்ற அவரின் மதிப்பை மேலும் வலுப்படுத்துகின்றன.

**தேச பாதுகாப்பிற்குப் புதிய பரிமாணத்தை வழங்கியுள்ள பிரதமர், அதை புதிய உயரத்தில் நிலைநிறுத்தியுள்ளார். பயங்கரவாதத்திற்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான முழு பாராட்டும் அவரது தலைமையையே சாரும்.** எல்லை தாண்டிய பயங்கரவாத முகாம்கள் மீது முதல்முறையாக துல்லியத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. முதல்முறையாக எல்லை தாண்டிய வான்வழி தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. முன்னர் சாத்தியமற்றதாகக் கருதப்பட்ட பாகிஸ்தானுக்குள் இருந்த இலக்குகள் மீது ‘ஆபரேஷன் சிந்தூரின்’ கீழ், முதல்முறையாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மாண்புமிகு பிரதமரின் உத்தரவின் பேரில், பல தசாப்தங்களுக்கு முன் பாகிஸ்தானுடன் கையெழுத்திடப்பட்ட நியாயமற்ற சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இனி இந்தியாவின் நீர் ஆதாரங்கள் இந்திய விவசாயிகளுக்குப் பயன்படும்.

**மாண்புமிகு பிரதமரின் தலைமையின்கீழ் நக்சல் பாதிப்புகளில் இருந்து இந்தியா முற்றிலும் விடுபட்டு வருகிறது.** வடகிழக்குப் பகுதிகளுக்காக கையெழுத்தாகும் பல நிரந்தர அமைதி ஒப்பந்தங்கள், அந்தப் பகுதியில் இதுவரை இல்லாத அமைதிக்கான புதிய சகாப்தத்திற்கு வழிவகுக்கின்றன. வங்கதேசத்துடன் பல தசாபங்கள் நீடித்து வந்த எல்லை பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது.

**தன்னிறைவு அடையாமல் ஒரு வளர்ச்சியடைந்த தேசமாக இந்தியாவால் மாற முடியாது என்று பிரதமர் மோடி அவர்கள் உறுதியாக நம்புகிறார்.** இந்த உத்வேகத்துடன், 'இந்தியாவில் உற்பத்தி செய்வோம்' மற்றும் 'தற்சார்பு இந்தியா' இயக்கங்கள் எழுச்சிபெற்றுள்ளன. பாதுகாப்பு, மின்னணுவியல், வாகனங்கள், மருந்துகள் போன்ற பல்வேறு துறைகளின் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் இந்தியா இன்று புதிய சாதனைகளைப் படைத்து வருகிறது. இது தவிர, குறைக்கடத்திகள், பசுமை எரிசக்தி, விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகளிலும் போற்றத்தக்க பணிகளை நாடு மேற்கொள்கிறது.

பிரதமரின் தலைமையின்கீழ், இந்தியாவின் உலகளாவிய பங்களிப்பும் முன் எப்போதும் இல்லாத வகையில் வலுப்பெற்றுள்ளது. இந்தியாவின் குரல் சர்வதேச மேடைகளில் ஓங்கி ஒலிக்கிறது. இந்தியாவின் ஜி 20 தலைமைத்துவம், உலகளாவிய தெற்கு நாடுகளின் லட்சியங்களுக்குக் குரல் கொடுத்தல் மற்றும் சர்வதேச முன்முயற்சிகளை வழிநடத்துதல் போன்ற செயல்பாடுகள், நாட்டின் சர்வதேச அந்தஸ்தை புதிய உச்சத்திற்குக் கொண்டு சென்றுள்ளன. பிரதமர் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, 170-க்கும் அதிகமான நாடுகள் ஒன்றிணைந்ததுடன், ஜூன் 21-ம் தேதியை சர்வதேச யோகா தினமாக ஐக்கிய நாடுகள் அறிவித்தது.

பிரதமரின் தலைமையின் கீழ், பருவநிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய துறைகளில், பொறுப்பான, ஊக்கமளிக்கும் மாதிரி ஒன்றை உலக நாடுகளின் பார்வைக்கு இந்தியா வைத்துள்ளது. சர்வதேச சூரியசக்தி கூட்டணி, பேரிடரை எதிர்கொள்ளத்தக்க உள்கட்டமைப்பிற்கான கூட்டணி மற்றும் உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி போன்ற ஏராளமான முன்முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளது. சர்வதேச தளத்தில் இந்தியாவின் பங்களிப்பாக, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கைமுறை (லைஃப் இயக்கம்) மற்றும் 'தாயின் பெயரில் ஒரு மரக்கன்று நடுதல்' போன்ற மக்கள் இயக்கங்கள், பிரதமரால்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மழைநீர் சேகரிப்பு மற்றும் அமிர்த நீர் நிலைகள் போன்ற பிரச்சாரங்கள் நீர் சேமிப்பிற்கு உதவியதுடன், இளம் தலைமுறையினருக்கு இந்தப் பொறுப்புணர்வையும் ஏற்படுத்தி உள்ளன.

இந்திய வரலாற்றில் முதல்முறையாக, வளர்ச்சியும், பாரம்பரியமும் ஒருசேர முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இது இந்தியாவின் கலாச்சார உணர்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அடிமை மனப்பான்மையிலிருந்து விடுபட்டு, தேச பெருமித உணர்வை மீட்டெடுத்து, நாட்டின் நாகரிக பாரம்பரியம் குறித்துப் பெருமிதம் கொள்ளுமாறு மாண்புமிகு பிரதமர், நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். இதன் பயன்களையும் இன்று நாடு கண்கூடாகக் காண்கிறது. புதிய நாடாளுமன்றக் கட்டடம், சேவா தீர்த்தம், கடமைப் பாதை மற்றும் கடமை மாளிகை போன்ற பல கட்டுமானங்கள், புதிய இந்தியாவின் புதிய நம்பிக்கையின் அடையாளங்களாகத் திகழ்கின்றன.

மக்களின் பங்கேற்பை, மாற்றத்திற்கான ஒரு ஊடகமாகப் பிரதமர் மாற்றியுள்ளார். தூய்மை இந்தியா இயக்கம், பெண் குழந்தைகளைக் காப்போம் பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் இயக்கம், சமையல் எரிவாயு மானியத்தை கைவிடுவதை ஊக்குவித்தல் போன்றவை, காலப்போக்கில் மக்களின் கூட்டு முயற்சிகளுக்கான முக்கிய ஊடகங்களாக மாறியுள்ளன. மக்கள் பங்கேற்பின் மூலம் ஏற்படும் இந்த மாற்றத்தால் எழுச்சி பெற்று, கொரோனா போன்ற பெருந்தொற்றை நாடு வெற்றிகரமாக எதிர்கொண்டது. இன்றும் கூட, மிகப்பெரிய உலகளாவிய நெருக்கடியை 140 கோடி மக்களும் ஒன்றாக எதிர்கொள்கின்றனர்.

கடந்த 12 ஆண்டுகளில் நாடு எதிர்கொண்ட அரசியல் ஸ்திரத்தன்மை, வளர்ச்சிப் பணிகளின் வேகத்திற்கு இதுவரை இல்லாத உத்வேகத்தை அளித்துள்ளது என்பதையும் மத்திய அமைச்சரவை சுட்டிக்காட்டுகிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவின் உள்கட்டமைப்புத் துறையில் ஏற்பட்டுள்ள விரைவான மாற்றங்களே இதற்குச் சிறந்த உதாரணம். இந்தியாவின் அரசியல்

ஸ்திரத்தன்மை, நாட்டின் உலகளாவிய செல்வாக்கின் மீதும், சர்வதேச முதலீட்டாளர்களிடையேயும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 12 ஆண்டுகளில் துடிப்பான செயல்பாடுகள், முடிவெடுப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் கொள்கைகளில் தொலைநோக்கு பார்வை ஆகியவற்றால் பிரதமர் தலைமையிலான நிர்வாகம் சிறந்து விளங்குகிறது. மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கியப் பொருளாதாரமாக இது இந்தியாவை மாற்றியுள்ளது.

மத்திய அமைச்சரவை:

1. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை முன்னிட்டு மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கு, பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.
2. ஏழைகளின் நலன் மற்றும் சமூகத்தின் விளிம்புநிலையில் உள்ள மக்களின் மேம்பாட்டிற்காக அவரது தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு நன்றியைத் தெரிவிக்கிறது.
3. இந்தியாவில் 25 கோடிக்கும் அதிகமான ஏழை மக்கள் வறுமையிலிருந்து மீளக் காரணமாக அமைந்த மாண்புமிகு பிரதமரின் கொள்கைகளைப் பாராட்டுகிறது.
4. தேசத்திற்குச் சேவையாற்றுவதில் அவர் காட்டிய இணையற்ற அர்ப்பணிப்பு மற்றும் அயராத உழைப்பிற்கு நன்றியைத் தெரிவிக்கிறது.
5. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக நீதியை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பாராட்டுகிறது.
6. நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், இந்தியாவின் நலன்களைப் பாதுகாப்பதிலும் அவரது தலைமையைப் பாராட்டுகிறது.

7. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான அவரது தொலைநோக்குப் பார்வை கொண்ட உறுதிப்பாடு மற்றும் தலைமைத்துவத்திற்கு முழுமையான ஆதரவை அளிக்கிறது.

மேலும்,

மாண்புமிகு பிரதமரின் நல்வாழ்வு மற்றும் நீண்ட ஆயுளுக்காக மத்திய அமைச்சரவை தனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் தலைமையின்கீழ், இந்தியா தன்னிறைவு பெற்ற, பாதுகாப்பான, செழிப்பான மற்றும் பெருமைமிக்க நாடாகத் தொடர்ந்து புதிய உயரங்களை எட்டும் என்றும், 2047-ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கான பாதையை வலுப்படுத்தும் என்றும் மத்திய அமைச்சரவை நம்பிக்கை தெரிவிக்கிறது.